மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாங்கள் சத்துணவிலே முட்டை கொடுக்கிறோம் என்று சொல்கிறார். அதில் என்ன தவறு இருக்கிறது? உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், நீங்கள் சொன்ன கருத்து அவைக் குறிப்பிலே ஏறியிருக்கிறது. அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள், 'அப்பொழுது போட்ட சத்துணவில் சத்து இல்லை என்பதற்காக முட்டை வழங்கப்பட்டது' என்று சொல்கிறார். அதிலே ஒரு திருத்தம்; 'அந்த சத்து போதாது என்பதற்காக முட்டை வழங்கப்பட்டதே தவிர, சத்து இல்லையென்று சொல்வது தவறு' (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி ஜெயராமன் அவர்கள், ஊக்கத் தொகை கொடுத்தாரா, இல்லையா? அதை ஏற்றுக்கொள்கிறாரா? (குறுக்கீடு) கொடுக்கவில்லை. சரி, நீங்கள்தான் ஒப்பந்தம் போட்டதாலே நன்மை என்றீர்கள். அப்புறம் ஏன் 10 கிலோ அரிசி 3½ ரூபாய்க்கும், 10 கிலோ அரிசி 6 ரூபாய்க்கும் போட்டீர்கள்? நாங்கள் கேட்பதற்கு நீங்கள் பதில் சொல்லுங்கள். அதைத்தான் நாங்கள் கேட்டோம். நீங்கள் ஒப்பந்தம் போட்டதனுடைய விளைவாக ஊக்கத் தொகையைக் கொடுக்க முடியாது என்று சொன்னீர்கள். அதைத்தான் நாங்கள் கேட்டோம். ஊக்கத் தொகை கொடுக்க வேண்டும், நீங்கள் சிவில் சப்ளைஸினுடைய அதிகாரத்தையே கொடுத்து விடுகிறீர்கள் என்று கேட்டோம். ஆனால், கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, ஊக்கத் தொகையையும் கொடுத்து, ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கும் போடுகிற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள். நீங்கள் ஊக்கத் தொகையையும் கொடுக்காமல், கிலோ அரிசி விலையை 10 கிலோ அரிசி 3½ ரூபாய்க்கும், 10 கிலோ அரிசி 6 ரூபாய்க்கும் போட்டீர்கள். ஒரே அரிசியை இரண்டு விலைக்கு விற்ற அரசு உங்கள் அம்மா அரசுதான், வேறு எங்கேயும் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வி பற்றி இன்றைய மானியம். இதிலே பாலம் எங்கே வந்தது, ஆறு எங்கே வந்தது என்பதையெல்லாம் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்த்துப் பேச வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். நாம் பேசுகின்ற மானியத்தினுடைய தலைப்புக்கும், பேச்சுக்கும் தொடர்பு இருந்தால்தான் நம்மை நல்ல parliamentarian என்று மக்கள் மதிப்பார்கள். அதனைக் கற்று, தெளிந்து, அவ்வாறு ஒழுகிட வேண்டும் என்பது என்னுடைய மேலான வேண்டுகோள். இது எல்லா உறுப்பினர்களுக்கும் பொருந்தும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மாலைராஜா, உரையை சீக்கிரம் முடியுங்கள்.

திரு. என். மாலைராஜா: தொகுதித் தேவைகளைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, உரையை சீக்கிரம் முடியுங்கள்.

திரு. என். மாலைராஜா: நீதி, நேர்மை, அண்ணா சுட்டிக்காட்டிய கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்னும் கொள்கைகளை வகுத்துக்கொண்டு, ஏறத்தாழ 70 ஆண்டு காலம் தமிழ் இனத்திற்காகப் பாடுபடுகின்ற டாக்டர் கலைஞருடைய நல்லாட்சியில், அவர் அங்கம் வகிக்கும் சட்டமன்றத்தில் நாம் எல்லாம் அங்கம் வகிப்பதே ஒரு சிறப்பு என்று சொல்லி, இந்த நல்ல வாய்ப்புக்கு நன்றி கூறி, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத், உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 10 நிமிடங்கள்.

***THIRU K. GOPINATH:** Hon'ble Speaker Sir, I should say thanks to you for giving me this opportunity to participate in Education Demand. I shall thank my C.L.P. leader naina Sudarssanamgaru, Deputy Leader Yasodha ammagaru. Also, I shall avail the opportunity to thank the great leader Dr. Kalaignar avargal in this magnificent structure, I call Maya Sabha, the Secretariat Complex by whom took its shape. In praise of Dr. Kalaignar, for his achievements, I shall render a lyric in minority language, i.e. my mother tongue. (Spoke in Telugu)

பிற்பகல் 12-10

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கின்றேன். ஆங்கிலத்திலே இதனை மொழிபெயர்த்துத் தந்திருக்க வேண்டுமென்று சொல்லுகின்றார். ஆங்கிலத்திலே மொழிபெயர்த்துத் தரத் தயார். ஓர் உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போதே, என்ன பேசப் போகிறார் என்று எதிர்பார்த்து, ஆங்கிலத்திலே மொழிபெயர்த்துக் கொடுக்க முடியாது. அவர் பேசி முடித்த பிறகுதான் என்ன பேசினார் என்பதை மொழிபெயர்த்துத் தர முடியும். இப்பொழுது அவர் பேசி முடித்துவிட்டார். அதை ஆங்கிலத்திலே மொழிபெயர்த்து உறுப்பினர்களுக்குப் பிறகு வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி, பேசுங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்துதான் நம்முடைய முன்னோர்கள், ஒரு நாட்டின் தலையெழுத்து வகுப்பறையில் நிர்ணயிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். இன்றைய மாணவர்கள் நாளைய நாட்டின் தூண்கள் என்றும், நாளைய சிற்பிகள் என்றும் சொன்னார்கள். அந்த அடிப்படையிலேதான் இந்த நாட்டை உருவாக்கக்கூடியவர்களாக இருக்கிற மாணவர்களுக்கு அவர்களுடைய கல்வி நலனில், அவர்களுடைய கல்வி வளர்ச்சியில் அரசு அதிக அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் முதலில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைய கல்வி முறை என்பது ஏதோ மதிப்பெண் பெறுவதற்காக இருக்கிற கல்வி நிலை என்று இல்லாமல், மாணவர்களை நாட்டுப்பற்று உடையவர்களாக, சேவை நோக்கம் கொண்டவர்களாக, விஞ்ஞானிகளாக, சிறந்த நிருவாகிகளாக, அறிஞர்களாக, பேராசிரியர்களாக, மருத்துவர்களாக, நல்ல பொறியாளர்களாக, தொழில் முனைவோர்களாக உருவாக்கக்கூடிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. மாணவர்களை உருவாக்கக்கூடிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறதென்பதை நான் முதலில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைய சூழ்நிலையில் ஏழைகள், கிராமப்புறத்தில் இருக்கக்கூடிய மாணவர்கள் அரசுப் பள்ளிகளிலே படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இன்றைய நிலையில் மாணவர்கள் அரசுப் பள்ளிகளில் சேர்வதில் எல்லாம் நாட்டம் செலுத்தாமல்,